**செய்தி வெளியீடு எண்: 454** **நாள்: 15.07.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், இன்று (15.072018), விருதுநகரில், நாடார் மஹாஜன சங்கத்தின் சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற கல்வித் திருவிழா–2018–ல் ஆற்றிய உரை**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் **116**வது பிறந்த நாள் விழா, கல்வித் திரு விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வரவேற்புரை வழங்கிய
நாடார் மஹாஜன சங்கத்தினுடைய பொதுச் செயலாளர்
மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய
திரு.கரிக்கோல் ராஜு அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை உரையாற்றிய இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே,
வாழ்நாள் சாதனை விருதினை பெற்று, இன்றைக்கு தன் வாழ்நாளிலே பல்வேறு சாதனகளை படைத்து சிறப்பான உரையாற்றி அமர்ந்திருக்கின்ற முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர்
மரியாதைக்குரிய பி.எச்.பாண்டியன் அவர்களே!
நீண்ட நாட்களாக அரசியலிலே ஈடுபட்டு, மூத்த அரசியல் சாணக்கியராக விளங்கிய காந்தி பேரவையினுடைய நிறுவனர் மரியாதைக்குரிய பெரியவர் டாக்டர் குமரிஆனந்தன் அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் சகோதரி ராஜலெஷ்மி அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் சகோதரர் ம.ஃபா.பாண்டியராஜன் அவர்களே,
கழகத்தினுடைய அமைப்புச் செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் மரியாதைக்குரிய வழக்கறிஞர் சகோதரர் மனோஜ் பாண்டியன் அவர்களே,
மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் பிரபாகரன் அவர்களே, விஜயகுமார் அவர்களே,
தூத்துக்குடி மாவட்ட கழகத்தினுடைய செயலாளர் முன்னாள் அமைச்சர் சகோதரர் சி.த.செல்லப்பாண்டியன் அவர்களே,
விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் ராதாகிருணன் அவர்களே,
தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி அவர்களே,

முன்னாள் அமைச்சர் சட்டப்பேரவை உறுப்பினர் அண்ணன் எஸ்.பி.சண்முகநாதன் அவர்களே,
சட்டப்பேரவை உறுப்பினர் திரு.எஸ்.செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்களே,
சட்டப்பேரவை உறுப்பினர், வழக்கறிஞர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை அவர்களே,
ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி எம்.சந்திரபிரபா முத்தையா அவர்களே,
முன்னாள் தோல் வாரியத் தலைவர் சகோதரர் விநாயக மூர்த்தி அவர்களே,
மற்றும்  மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் சகோதரர் எஸ்.எஸ்.கதிரவன் அவர்களே,
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி, முன்னாள் மாநிலங்களை உறுப்பினர் எனது அருமைச் சகோதரர் மரியாதைக்குரிய என்.தளவாய் சுந்தரம் அவர்களே,
இந்த மேடையில் வீற்றிருக்கின்ற நாடார் மஹாஜன சங்கத்தினுடைய நிர்வாகிகளே, பொறுப்பாளர்களே,
வருகை தந்திருக்கின்ற
பெரியோர்களே! தாய்மார்களே!
நாடார் சமுதாயத்தைச் சார்ந்த பெரியோர்களே!
ஊடக மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களே!
மற்றும் பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே,
அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

115 ஆண்டுகளுக்கு முன்பு, இதே நாளில் திரு.குமாரசாமி–சிவகாமி அம்மையார் தம்பதிக்கு மகனாக பிறந்த ஒரு சிறுவன், தன்னுடைய தந்தையின் மறைவுக்குப் பிறகு பள்ளிக்கு செல்ல முடியாமல், தாய்மாமன் கருப்பையா நாடாரின் துணிக்கடைக்குப் போகவேண்டிய சூழ்நிலையிலும், தவறாது ஞானம்பிள்ளையின் பொடிக்கடைக்கு பத்திரிகைகளை படிப்பதற்காகவே போவான்.

அங்கு வரும் பத்திரிகைகளை ஆர்வத்துடன் படிப்பான்,  அரசியல் பற்றி மற்றவர்களுடன் விவாதிப்பான்.

இந்த சிறுவனுக்கு அரசியல் அக்கறை
வேண்டாமென்று அவரது பாட்டி கூறுவார்.
அதற்கு  அந்த மாணவன்
“நான் ஒன்று சொல்லுகிறேன் பாட்டி.
நம்ம எண்ணெய் கடை பெரியசாமி அண்ணாச்சி வீட்டில் இருக்கிற நாய் மிகவும் அழகாக இருக்கிறது.
ஆனால் அந்த நாய் நம் வீட்டிற்குள் நுழைந்தால்
முதலில் விரட்டுபவர்களே நீங்கள்தான் பாட்டி,   அதேமாதிரிதான்  வெள்ளைக்காரன்.
நம்ம நாட்டிலே அவனுக்கு என்ன வேலை?
அதிகாரம் செய்கிறான்.

அதைக் கண்டிக்காமல் எப்படி விடுவது பாட்டி **?**'' என்றான் அந்த சிறுவன்.

அச்சிறுவன் தான் பிற்காலத்தில் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்த **பெருந்தலைவர் காமராசர்.**

மகாத்மா காந்தியின் தலைமையில்
நடைபெற்றுக் கொண்டிருந்த சுதந்திரப் போராட்டம்
பற்றி பத்திரிகையின் மூலமும்,
விருதுநகரில் உள்ள 'பம்பாய் அண்ணாச்சி' என்றழைக்கப்பட்ட திரு. கோவிந்த நாடாரின் மூலமும் தெரிந்துகொண்டார்.

இதனால் நாட்டின் மீதும்,
தேசியத் தலைவர்கள் மீதும்,
பற்றும் பக்தியும் ஏற்பட்டது.

இதன் மூலம் மகாத்மா காந்திஜியின்
மானசீக தொண்டனாகவே மாறினார்.

இதன் விளைவாக தனது **16**வது வயதில்
காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.
காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தபின்,
தீரர் சத்தியமூர்த்தி அவர்களை தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.
**1930**ஆம் ஆண்டு நடைபெற்ற உப்புசத்தியாகிரக போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார்.
பின்னர் **"வெள்ளையனே வெளியேறு போராட்டம்"** போன்ற பல்வேறு சுதந்திரப் போராட்டங்களில்
பங்கு கொண்டு சிறை சென்றார்.
அவர் தனது இளமைக் காலத்தில் **9** ஆண்டுகளை சிறையிலேயே கழித்து, தனது வாழ்வை நாட்டுக்காகவே அர்ப்பணித்தார்.

**இவர் 1936 ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் ஆனார்.**

பின்னர் **1940**ஆம் ஆண்டு,
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
**1954**ஆம் ஆண்டு வரை அந்த பொறுப்பினை வகித்தார்.

**1940**ஆம் ஆண்டு விருதுநகர் நகராட்சிக்கு
நடந்த தேர்தலில், **காமராசர் சிறையில் இருந்து கொண்டே வெற்றி பெற்றார்.** பின்னர் **1941**ஆம் ஆண்டு அந்த நகராட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
சிறையிலிருந்து வெளிவந்த பின்

நகராட்சித் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டபின்னும் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபடுவதில் அவருடைய நாட்டம் இருந்ததால்,
அந்தப் பதவியை ராஜினாமா செய்தார்.

இவர் முதன்முதலில் 1937 ஆம் ஆண்டு
சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் மீண்டும்
1946ஆம் ஆண்டில் சென்னை மாகாண
சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன் பின்னர் 1952 ஆம் ஆண்டு,
ஸ்ரீவில்லிபுத்தூர் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் நாள் தமிழ்புத்தாண்டில் **தமிழ்நாட்டின் முதலமைச்சராக** பதவியேற்றார்.

1954ஆம் ஆண்டு முதலமைச்சராக பதவியேற்ற சமயம் அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவரது நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட தொகுதியில் உள்ள யாரையும்
பதவி விலகச் சொல்லாமல், அப்போது காலியாக இருந்த குடியாத்தம் சட்டமன்ற தொகுதியிலிருந்து போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் 1957 மற்றும் 1962ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தல்களில், சாத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

காமராசர் அவர்கள் 1954 முதல் 1963 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக 9 ஆண்டுகள் பணியாற்றினார்.

பின்னர், அக்டோபர் 1963 முதல் 1967ஆம் ஆண்டு வரை
அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக பொறுப்பு வகித்தார்.

1969 மற்றும் 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் நாகர்கோவில் நாடாளுமன்ற தொகுதியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சாதாரணத் தொண்டனாக பொது வாழ்வைத்
தொடங்கி, நாட்டுப்பணியையே தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து, பின்னர் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியலில் ஒரு தனிப்பெரும் சக்தியாக திகழ்ந்தவர் கர்மவீரர் காமராஜர்.

**இந்தியா முழுமையும் பெருந் தலைவராக போற்றப்பட்ட கர்ம வீரர் காமராஜர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்தார்.**

அத்தகைய பெருமைக்குரிய பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**சிரஞ்சீவியாக வரலாற்றில் வாழ்பவர்கள் சிலர்; அவர்களில் வரலாறாகவே மாறியவர்கள் ஒருசிலர்தான். அந்த ஒரு சிலரின் வரிசையில் முன்னிலையில் இருப்பவர் கர்மவீரர் காமராஜர் அவர்கள்.**

**'வாழ்ந்தவர் கோடி    மறைந்தவர் கோடி**
**மக்களின் மனதில் நிற்பவர் யார் ?'**
என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கேள்விக்கு பதிலாக இருப்பவர்களில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதன்மையானவர்.

மக்களாட்சியில் ஒரு தலைவர்,
தான் ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்காக உழைக்க வேண்டும் – தியாகம் புரியவேண்டும்.
கட்சியில், தலைமை ஏற்கும்போதும்,
ஆட்சியில், தலைமை தாங்கும்போதும்,
**கறைபடாத பணி செய்யவேண்டும் என்பதற்கு பெருந்தலைவர் காமராசர் எடுத்துக்காட்டாய், இலக்கணமாய் திகழ்ந்தவர்**

**எளிய வாழ்க்கை, நேர்மை,**
**அன்பான அணுகுமுறை,**
**எதனையும் சுருக்கமாக சொல்லும் இயல்பு,**
**எதையும் சாதிக்கும் மன உறுதி,**
**இவைகள்தான் பெருந்தலைவர் காமராஜரின்**
**தனிச் சிறப்புகள்.**
ஒரு நாட்டின் அடிப்படைத் தேவைகளான
கல்வி, விவசாயம், தொழில் வளம்,
நீர் பாசனம் ஆகிய துறைகளில்
கர்மவீரர் காமராஜர்அதிக கவனம் செலுத்தினார்.

சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்து, அதற்குக் '**கல்வி ஒன்றே வழி**' என்ற
உண்மையை உணர்ந்து தம் ஆட்சியில்
கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தவர் பெருந்தலைவர் காமராஜர்.

படிக்க வசதியில்லாத ஏழைகளுக்காக
'**இலவசக் கல்வித் திட்டத்தை**' நடைமுறைப்படுத்தினார்.
கல்வி வளர்ச்சி ஒன்றே,

சமுதாயத்தை மாற்றும் என்பது
அவரது நம்பிக்கை..

**“தனி மனிதனோ,
சமூகமோ உயர வேண்டுமானால்,
அதனைக் கல்வியினால் மட்டுமே செய்ய முடியும்”
என்று தந்தை பெரியார் கூறினார்.**

கல்வித்துறையில் ஒரு நூற்றாண்டில் ஏற்பட வேண்டிய வளர்ச்சியை, முதலமைச்சர் காமராசர் ஒன்பது ஆண்டுகளில் சாதித்துக் காட்டினார்.

தனது ஆட்சிக் காலத்தில் பள்ளிகளின் எண்ணிக்கையை பன்மடங்காக உயர்த்தி, தமிழ்நாட்டில் கல்விப் புரட்சிக்கு வித்திட்டவர் பெருந்தலைவர் காமராஜர்.
கிராமங்களில் உள்ள குழந்தைகள் கல்வி பயில வழி வகுத்தவர் பெருந்தலைவர்

காமராஜர்.

இன்று, தமிழ்நாட்டில் 80 சதவீதத்திற்கு மேல் கல்வியறிவு பெற்றவர் இருக்கின்றனர் என்றால்,
அதற்கு அடித்தளம் இட்டவர் பெருந்தலைவர்
காமராஜர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

விருதுநகரில் இன்று சிறப்புடன் செயல்படும்
**ஷத்திரியர் வித்தியாசாலா மேல்நிலைப்பள்ளி** தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல,
இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கிய கல்வி நிலையமாகும்.

இப்பள்ளி 1888ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. விருதுநகரில் உள்ள நாடார் சமுதாயத்தினர் தங்களின் சமுதாய நிதியிலிருந்து இந்தப் பள்ளிக்கூடத்தைத் துவக்கினர்.
இந்தப் பள்ளியில், சாதி, சமய வேறுபாடு இன்றி,
எல்லா மாணவர்களையும் சேர்த்தனர்.

எல்லாப் பிள்ளைகளும் ஒழுங்காக பள்ளிக்கு வரவேண்டும்; பசி, பட்டினி, காரணமாக அவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக
இலவச மதிய உணவு கொடுத்தனர்.
இந்தப்பள்ளிக்கு உதவுவதற்காக,
விருதுநகரில் உள்ள ஒவ்வொரு வீட்டாரும்
தினமும் ஒரு பிடி அரிசிகொடுத்து உதவினர்.

இதனைப் பெற நாடார் உறவின் முறை சார்பில்,
சிலர் தினமும் எல்லா வீதிகளுக்கும் நடந்து சென்று ஒவ்வொரு வீட்டிலும் பிடி அரிசியைப் பெற்று வந்தனர்.

இதன் காரணமாக இப்பள்ளி
**'பிடியரிசி பள்ளி'** என்று அழைக்கப்பட்டது.

தினமும் பிடி அரிசி வாங்குவது சிரமமான பணியாக இருந்ததால், ஒவ்வொரு வீட்டாரும்,
தங்களின் வீட்டில் தனியாக ஒரு பானையில்
ஒவ்வொரு நாளும் பிடியரிசியைப் போட்டு வந்தனர்.

பிடி அரிசியை வாரத்திற்கு ஒரு முறை
மொத்தமாகச் சேர்த்து, எல்லா வீட்டிலும் பெற்றனர். அரிசி, மூட்டைக் கணக்கில் சேர்ந்தது.
காமராசர் முதல்வரானதும்,
மதிய உணவுத் திட்டத்தைத் தீவிரப் படுத்தியதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியது
**அவர் படித்த 'பிடியரிசி' பள்ளிக்கூடம் தான்.**

கிராமப்புற மாணவ, மாணவிகள்
கல்வியறிவு பெற, வறுமை பெரிய தடையாக இருப்பதைத் தமது அனுபவம் மூலம் பெருந்தலைவர் காமராஜர் உணர்ந்தார்.
மாணவர்களுக்குப் பள்ளியிலேயே,
ஒருவேளை உணவு அளித்தால்,
அதிகமான பிள்ளைகள் கல்வி கற்க முன்வருவார்கள்.

அதன்மூலம், படிப்பறிவு பெறுவோரின் எண்ணிக்கையை உயர்த்தலாம். அது சமுதாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்ற எண்ணத்தில்,
உதித்ததுதான் மதிய உணவுத் திட்டம்.

ஒருமுறை பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், அப்போதைய பள்ளிக்கல்வி இயக்குநர் திரு.நெ.து.சுந்தரவடிவேலு அவர்களும்,

ஒரு நிகழ்ச்சிக்கு காரில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நேரம் ரயில்வே கேட்
மூடி விட்டதால், கார் நின்றது.
அப்போது பெருந்தலைவர் காமராஜரின் கண்களுக்கு அருகில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஏழை சிறுவர்கள் தெரியவே, அவர்களை அழைத்து

**"இப்போது பள்ளிக்கூட நேரமாச்சே.**
**ஏன் பள்ளிக்கூடம் செல்லாமல் ஆடுகள் மேய்த்துக்கொண்டிருக்கிறீர்கள் ?"**
என பெருந்தலைவர் கேட்டார்.

காமராஜர் யார் என்று தெரியாத அந்த சிறுவர்கள் **“நாங்கள் பள்ளிக்கூடம் போனால் யார் சாமி சாப்பாடு போடறது ?”** என்று கேட்டார்கள்.

**“சாப்பாடு போட்டால் பள்ளிக்கூடம் போவீர்களா ?”**
என்று காமராஜர் கேட்டார்.

சிறுவர்கள் ஆமாம் என்று தலையாட்டினார்கள். அருகிலிருந்த திரு. சுந்தரவடிவேலுவிடம்,

**“தமிழ்நாடு முழுவதும் மதிய உணவு போட ஏற்பாடு செய்யுங்கள், அதற்கு என்ன செலவானாலும் சமாளித்துக்கொள்ளலாம்”** என்றார்.
**அப்படி உருவானதுதான் மதிய உணவுத்திட்டம்.**

இந்த திட்டத்தைப் பற்றி எட்டயபுரத்தில்
அவர் பேசுகையில்,

**“எதற்காக சுதந்திரம் வாங்கினோம்,**
**எல்லோரும் எப்படி வாழணும் ?**
**ஆடு, மாடுகள் மாதிரி உயிரோடு இருந்தால் போதுமா ? மனிதர்களாக வாழணும்,**
**அதற்கு படிப்பு வேணும், பட்டினியாக இருந்தால் படிப்பு வருமா ? வராது.**
**ஏழைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடங்களில்**
**சாப்பாடு போடணும். அப்ப தான் படிப்பு ஏறும்.**
**இதுவே முதல் வேலை. முக்கியமான வேலையும் கூட.**
**இதை நான் ரொம்ப முக்கியமாகக் கருதுகிறேன்.**
**அதனால் மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, இதே வேலையாக ஊர், ஊராக பிச்சையெடுக்கவும் சித்தமாக இருக்கிறேன்”**
என்று உருக்கமாகப் பேசினார் கர்மவீரர் காமராஜர் அவர்கள்.

எல்லா ஏழைப்பிள்ளைகளும் இலவச கல்வியை
பெற வேண்டும். அவர்கள் முன்னேற வேண்டும் என்பதில் பெருந்தலைவர் அவர்கள் காட்டிய அக்கறையை இந்த நிகழ்வு புலப்படுத்துகிறது.

பசியை மட்டும் விரட்டினால் போதாது,
அவர்கள் சத்தானவர்களாகவும் வளர வேண்டும்
என்ற எண்ணத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர். அவர்கள் மதிய உணவுத் திட்டத்தினை, சத்துணவுத் திட்டமாக மாற்றினார்கள்.**

**வெறும் சத்துணவுடன் நில்லாமல்,**
**இளைய தலைமுறையினருக்கு அனைத்து வகையான சத்துகளும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்,**
**தினமும் சூடான கலவை சாதத்துடன்**

**பயறு வகைகள் மற்றும் உருளைக் கிழங்கு**
**ஆகியவற்றையும் வழங்கி**
**பெருந்தலைவரின் திட்டத்தை மேலும் மெருகேற்றினார்கள்.**

இவ்வாறு பெருந்தலைவர் கொண்டு வந்த திட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பலவகைகளிலும் மெருகேற்றி செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த,
மாண்புமிகு அம்மாவின் அரசு,
அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு
உறுதி பூண்டுள்ளது.

அதனை நிறைவேற்றும் வகையில்,
2018–19–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், எத்தனையோ துறைகள் தமிழகத்தில் இருந்தாலும், அனைத்துத் துறைகளைக்காட்டிலும் பள்ளிக் கல்வித் துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக 27ஆயிரத்து 205 கோடியே 88 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதற்கு சான்றாகும்.

மிகத் தெளிவான திட்டமிடலின் காரணமாக
10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான
பொதுத் தேர்வு நடைபெறும் தேதிகளும்,
இந்த வகுப்புகளுக்குரிய பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப்படும் தேதிகளும் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே கொடுக்கப்பட்டதன் காரணமாக மாணவர்களின் மன அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது.

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் மாணவ, மாணவியர்களுக்கான பல திட்டங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா வழியில் செயல்படும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
பள்ளி மாணவர்களுக்கு படிப்பிற்கு தேவையான
விலையில்லா சீருடை, காலணி
இடைநிற்றலை குறைத்திட சிறப்பு ஊக்கத் தொகை,
விலையில்லா மடிக்கணினிகள்,
விலையில்லா மிதிவண்டி,
கட்டணமில்லா பேருந்து பயண அட்டை,
என அனைத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி
அம்மா வழியில் செயல்படும் அரசால் தொடர்ந்து மாணவர் சமுதாயத்திற்கு
வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களுக்காக 2018–19 ஆம் ஆண்டில் ஆயிரத்து 967 கோடியே 47 லட்சம் ரூபாய்

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா வழியில் செயல்படும் அரசால் பொதுத் தேர்வுகளில் அறிவிக்கும் தரமுறை கைவிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மாணாக்கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தைக் குறைத்து மனநிம்மதியை அளித்துள்ளது.

2017–18ஆம் கல்வியாண்டு முதல்
10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய
20 லட்சம் மாணவர்களுக்கு அவர்களுடைய கைபேசி மூலமாக தேர்வு முடிவுகள் வெளியான 2 நிமிடத்தில் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்பட்டு சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் தமிழில் அச்சிட்டு வழங்கும் முறை மார்ச் 2017 பொதுத் தேர்வு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறு தமிழக கல்வித்துறையில் செயல்படுத்தப்படும்
சிறந்த திட்டங்களில் ஒரு சிலவற்றை
மற்ற மாநிலங்களில் உள்ள கல்வித் துறை,
தங்கள் மாநிலங்களிலும் செயல்படுத்தி வருகின்றன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்ம வீரர் காமராஜர் அவர்கள் **பள்ளிக்கல்விக்கு**
**எவ்வாறு ஊக்கம்** அளித்தார்களோ, அது போல் மாண்புமிகு அம்மாஅவர்களின் அரசு
**உயர் கல்வித்துறைக்கும் முக்கியத்துவம்**
அளித்து வருகிறது.

2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபோது, உயர்கல்வி படித்திருந்த மாணவர்களின் சதவீதம் 21.
**இன்றைய தினம் தமிழகத்தில்**
**46.94 சதவித மாணவர்கள் உயர்கல்வி படிக்கின்றனர்.**
**இதன் காரணமாக இந்தியாவிலேயே**
**உயர்கல்வி படிக்கின்ற மாணவர்கள் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கண்ட கனவு அம்மாவினுடைய அரசால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதற்கு காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள் உயர் கல்விக்கு அளித்த ஊக்கமும்,
65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியதும் தான்.

அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசு கடந்த ஆண்டு, மேலும் 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியில் இருக்கின்ற ஏழை மாணவ, மாணவியரும் குறைந்த கட்டணத்தில் கல்வியறிவு பெறுவதற்காக, உயர்கல்வி படிப்பதற்காக, இன்றைக்கு 2011–லிருந்து இன்றுவரைக்கும் ஆகமொத்தம் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு.

1961 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொது நூலகச் சட்டத்தை இயற்றி, 454 கிளை நூலகங்களையும்,
எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட மைய நூலகங்களையும் ஏற்படுத்தினார்.

இப்படிப்பட்ட மக்கள் திட்டங்களால் தான்,
**'காமராஜர் ஆட்சி',** என்னும் சொற்றொடர் இந்திய அரசியல் சொல்லகராதியில் இடம்பெற்றன.

விவசாய நிலங்களுக்கு பாசன வசதி அளித்து
உணவு உற்பத்தியைப் பெருக்க ஆறுகளின் குறுக்கே பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் பல்வேறு அணைகளை கட்டப்பட்டது.

**பரம்பிக்குளம் – ஆழியார் திட்டம்,**
**கீழ்பவானி – நீர்த் தேக்கத் திட்டம்,**
**அமராவதி – அணைக்கட்டுத்திட்டம்,**
**சாத்தனூர் – நீர்த்தேக்கத் திட்டம்,**
**வைகை – அணைக்கட்டுத் திட்டம்,**
**மணிமுத்தாறு – உயர்மட்ட கால்வாய் திட்டம்**
இப்படி பல அணைகளை கட்டி விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்.

தற்காலம் அறிவியல் காலம். இதற்கு அடிப்படை தேவை மின்சக்திதான்.
இந்த மின்சக்தியை பெருக்காமல் தொழில் வளர்ச்சிகாண முடியாது என்பதை நன்கு அறிந்து பல மின் திட்டங்களை பெருந்தலைவர் செயல்படுத்தினார்.
அவருயை ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மின்திட்டங்கள்:
**பெரியார் – மின்சக்தி திட்டம்,**
**குந்தா – மின்சக்தி திட்டம்,**
**நெய்வேலி – மின்சக்தி திட்டம்,**
**கும்பார் அமராவதி – மின்திட்டம்,**
**மேட்டூர் கீழ்நிலை நீர்செல்வழி – மின்திட்டம்,**
ஆகிய மின் திட்டங்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் என்பதை பெருமையயோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், மாண்புமிகு அம்மா அவர்கள்

2011ல் தமிழ்நாட்டின் முதல்வராக பதவியேற்ற
போது ஒரு நாளைக்கு 10 மணி நேரம், 15 மணி
நேரம் மின்தடை. அம்மா அவர்கள் சொன்னார்கள்
இன்னும் 3 ஆண்டுகளில் தமிழகத்தை மின் மிகை
மாநிலமாக மாற்றுவேன் என்று சூளுரைத்தார்கள், சொன்னதை நிறைவேற்றினார்கள்.
அம்மா அவர்கள் வழியில் இன்றும் ஆளுகின்ற நம்முடைய அரசால்
தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக திகழ்கிறது என்பதை
இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**“ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம்”**
என்ற மகாகவி பாரதியாரின் வாக்கினை மெய்ப்பிக்கும்
வகையில் ஆட்சி செய்தவர் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர்அவர்கள்.
அவருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் தொழில் புரட்சி ஏற்பட்டது.
பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை,
நெய்வேலி பழுப்பு நிலக்கரி தொழிற்சாலை,
உதகமண்டலத்தில் போட்டோ பிலிம் தொழிற்சாலை,
சென்னையில் – இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை,
திருச்சியில் பாய்லர் தொழிற்சாலை,
ஆவடியில் டாங்க் தொழிற்சாலை,
சென்னை கிண்டி, மதுரை, விருதுநகர், திருச்சி போன்ற ஒன்பது நகரங்களில்
தொழிற்பேட்டைகள்,

கூட்டுறவுத்துறை சார்பில் நூற்பாலைகள்
ஆகிய அனைத்தும், பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டிற்கு
கிடைத்த அரிய திட்டங்களாகும்.

அதேபோல் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலீட்டாளார்களை ஈர்க்கும் வகையில்
உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை
வெற்றிகரமாக நடத்தினார்கள்.
மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில்
வரும் 2019–ல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு அம்மா அரசால் மீண்டும்
நடத்தப்படவுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தாய் நாட்டின் மீது இருந்த அதே பற்று,
தாய்மொழியின் மீதும் பெருந்தலைவருக்கு இருந்தது.
சென்னை மாகாணத்தின் 1957–58ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை
தமிழிலேயே சமர்ப்பிக்கப்பட்டது பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில்தான்.
1956–ல் தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் கொண்டு வந்ததும் பெருந்தலைவர் காமராஜர்
தான்.

பெருந்தலைவர் ஆட்சிக்காலத்தில்தான்
தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்கு மாத ஊக்கத் தொகையும்,
அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டன.
பெருந்தலைவர் ஆட்சிக் காலத்தில்தான்
கலைச்சொல் அகராதி வெளியிடப்பட்டது.

தன்னை காந்தியடிகளின் தொண்டனாக
பொது வாழ்க்கையில் இணைத்துக் கொண்டு சிறுவயதிலேயே ஒரு நாடு எப்படி வளர வேண்டும் என்று தீர்க்கமாக மனத்தில் இறுத்திக் கொண்டவர் காமராஜர்.

நாட்டைப்பற்றி தன் மனதில் தேக்கி வைத்திருந்த எண்ணங்களையெல்லாம் பின்னாளில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்புக்கு வந்த பிறகு படிப்படியாக நிறைவேற்றினார்.

தலைவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியதோடு மட்டுமல்லாமல், மக்களுக்கும், மாணவர்களுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்.

இந்திய அரசியல் வரலாற்றில்,
இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற
தலைவர் காமராஜர்.
**பெருந்தலைவர்,**
**கருப்புகாந்தி,**
**கர்மவீரர்,**
**பச்சைத்தமிழன்,**
**படிக்காதமேதை,**
**கிங்மேக்கர்,**
**ஏழைப்பங்காளன்**
எனப் பலவாறு போற்றப்படுகிறவர் காமராஜர் அவர்கள்.
மகாத்மா காந்தியைத் தம் லட்சியத் தலைவராக
ஏற்றுக் கொண்ட பெருந்தலைவர் காமராஜரும்
**'நலிந்த மக்களின் உயர்வே என் கொள்கை'**
என்றும் வாழ்ந்தார்.

பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள்
1964 மே 27 ஆம் நாளன்று திடீரென காலமானார்.
இந்தச் செய்தி காமராஜருக்கும், நாட்டுக்கும்
ஒரு பேரிடியாக அமைந்தது.
நேருவுக்குப் பிறகு பிரதமர் யார்?
என்ற கேள்வி உலகளவில் எழுந்தது.

இந்தியாவின் எதிர்காலமே ஒரு கேள்விக்குறியானது. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு கர்மவீரர் காமராஜர் கையில் ஒப்படைக்கப்பட்டது.

‘பிரதமர் தேர்வு போட்டியில்லாது இருக்க வேண்டும், தேர்ந்தெடுக்கப்படுபவர் பிரதமர் பதவிக்கு
ஏற்றவராகவும் இருக்க வேண்டும்’ என்று
காமராஜர் சிந்தித்தார்.

தமது அரசியல் சாதுரியத்தால், சமரச வேட்பாளராக
திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களையும்,
அவருக்குப் பிறகு
திருமதி இந்திரா காந்தி அவர்களையும்
தேர்வு செய்து, பாரதப் பிரதமர் ஆக்கினார்.
இதனைக் கண்டு உலகமே வியப்பில் ஆழ்ந்தது.

அரசியல் அறிவியல் தத்துவத்தில்
**“அரசர்களை உருவாக்குபவரே,**
**அரசரை விட உயர்ந்தவர்”**
என அறிஞர்கள் கூறுவார்கள்.

இந்திய நாட்டையும் ஜனநாயகத்தையும்
வழிநடத்த, நெருக்கடியான நேரங்களில்
இரண்டுமுறை இந்தியப் பிரதமர்களை
கர்மவீரர் காமராஜர் தேர்ந்தெடுத்தது,
வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வுகளாகும்.
உலகில் பிறப்பால் சிலர் பெருமை பெற்றனர்;
சிலர் தமது உழைப்பால், பெருமை பெற்றனர்;
சிலர் மீதோ பெருமை திணிக்கப்பட்டது,

பெருந்தலைவர் காமராஜர், உழைப்பால் மட்டுமே பெருமையை எட்டிப் பிடித்தவர். எனவே,
இந்திய அரசியல் வரலாற்றில் காமராஜருக்குத்
தனித் தன்மையோடு கூடிய ஒரு முக்கிய இடம் உண்டு என்பதில் தமிழர்களாகிய நாம் பெருமை அடையலாம்.

குடும்பப் பின்னணி, பணபலம், உயர் கல்வி ஆகிய பின்புலம் ஏதுமின்றி, கர்மவீரர் காமராஜர், ஒரு சாதாரண தொண்டனாகப் பொது வாழ்க்கையைத் தொடங்கி, ஒரு பெருந்தலைவராகப் வளர்ந்தது சரித்திர சாதனையாகும்.

தலைவர்களுக்கு நல்ல தொண்டராகவும், தொண்டர்களுக்கு நல்ல தலைவராகவும்
பெருந்தலைவர் காமராஜர் வாழ்ந்தார்.

மனிதர்களை எடைபோடுவது, சமயோசித ஆற்றல், பொறுமை, நிதானம்,
தொண்டர்களிடம் நெருக்கம் ஆகியன கர்மவீரர் காமராஜரிடம் காணப்பட்ட சீரிய பண்புகள்.
பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து,
அனைவரின் கருத்துக்களையும் கேட்டு முடிவெடுக்கும் சிறந்த தலைமைப் பண்பு அவரது வெற்றியின் ரகசியம்.

1967இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது; காங்கிரஸ் தோல்வி அடைந்தது. அப்பொழுது தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. பெருந்தலைவர் காமராஜர் அரசியல் நாகரிகத்தோடு “6 மாதகாலம் தி.மு.க. ஆட்சியை யாரும் விமர்சிக்கக் கூடாது” என்று காங்கிரஸ் கட்சியினருக்குக் கட்டளையிட்டார்.

பெருந்தலைவர் காமராஜரது அரசியல் முதிர்ச்சியை
இது காட்டுகிறது. ஒரு ஆக்கபூர்வமான எதிர்க்கட்சித் தலைவராக அரசியலில் கர்மவீரர் காமராஜர் செயல்பட்டாரே ஒழிய, ஒருபோதும் அநாகரிகமாகச் செயல்பட்டது கிடையாது.

கர்மவீரர் காமராஜர் சமுதாயத்தின் அடித்தட்டிலிருந்து தலைவராக உருவாகி வந்த காரணத்தால், சமுதாயப் பிரச்சினைகளை நன்கு உணர்ந்திருந்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
**“பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்**
**பிறந்து நூறாண்டு கடந்து விட்டாலும்,**
**நம்முடைய நினைவிலே, அவருடைய எளிமையால், தன்னலமற்ற தொண்டால், நாட்டுப் பற்றால்,**
**புரிந்த தியாகத்தால் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது”** என்றார்.

**“பெருந்தலைவர் காமராசர் அவர்களின்**
**அத்தனை பண்பு நலன்களையும் கைக்கொள்ள முடியாவிட்டாலும், அவற்றில் ஒரு சிலவற்றையாவது இன்று அரசியலுக்கு வர விரும்புவோர் பின்பற்ற வேண்டும் என்பதே அவரது வாழ்க்கை நமக்கு**
**சுட்டிக் காட்டுகின்ற உண்மையாகும்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.**

சென்னையில் உள்ள கர்மவீரர் காமராசர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக 21.6.1978 முதல் தமிழ்நாடு அரசு பராமரித்து வருகிறது.
**இதற்கான உத்தரவினை அன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிறப்பித்தார்கள்.**

பெருந்தலைவர் காமராஜர் அதிகம் கல்வி கற்காதவர். ஆனால், கல்விக் கூடங்களை அதிகமாக திறந்தவர். கல்விக்காக அதிக திட்டங்களை வகுத்தவர்.

கர்மவீரர் காமராஜர் அறிவியல் படிக்கவில்லை– ஆனால் அவருடைய அரசியலும், ஆட்சியும் அறிவியல் ரீதியாகத்தான் இருந்தது.

பெருந்தலைவர் காமராஜர் திருக்குறளாக வாழ்ந்து காட்டியவர்.

கர்மவீரர் காமராஜர் இறந்தபின்பு, அவர் வசித்த வாடகை வீட்டை, அதன் சொந்தக்காரர் எடுத்துக் கொண்டார். அவர் பயன்படுத்திய காரை, காங்கிரஸ் கட்சி எடுத்துக் கொண்டது. அவருடைய பெயரை மட்டும் வரலாறு எடுத்துக் கொண்டது என்பதை நினைவு கூறவிரும்புகிறேன்.

கவிஞர் வாலி
**“ஒரு பெண்ணை மணக்காமல்**
**இம்மண்ணை மணந்தவன்”**
என்று பெருந்தலைவரை புகழ்ந்து பாடினார்.
**‘கல்வி கண் திறந்த காமராஜர்’** என்று பாமர மக்களால் போற்றப்பட்ட பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை தமிழ்நாடு அரசு கல்விவளர்ச்சி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.

**தென்னகத்தில் துவக்கப்பட உள்ள பல் மருத்துவக் கல்லூரியை தமிழகத்தில் கல்விப் புரட்சியை ஏற்படுத்திய பெருந்தலைவர் காமராஜர் பிறந்த மாவட்டமான விருதுநகரில் துவக்குவதே சாலச் சிறந்தது என்பதால், இங்கு அக்கல்லூரியை துவக்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.**

**பெருந்தலைவர் நினைவாக சென்னை எண்ணூர் துறைமுகத்திற்கு காமராஜர் துறைமுகம் என்றும்; உள்நாட்டு விமானநிலையத்திற்கு காமராஜர் விமானநிலையம் என்றும் பெயர்சூட்டப்பட்டுள்ளன.**

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு,
விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் மூலம் செயல்படுத்திய திட்டங்களில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

விருதுநகர் மக்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதியை மேம்படுத்த சுகாதாரத் துறையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகின்றது.
18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் தாய்சேய் நலப்பிரிவு கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மேலும், இம்மாவட்டதில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகள் நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளன.

இம்மாவட்டத்தில் 1 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
50 மெட்ரிக் டன் கால்நடை தீவன தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு
கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மூலம் அருப்புக்கோட்டையில் அரசு தொழிற் பயிற்சி கட்டடம் 2 கோடி ரூபாயில் கட்டப்பட்டு, திறக்கும் தருவாயில் உள்ளது.

கால்நடைத் துறையில் சார்பில் மீனாட்சிபுரம், நல்லமங்கலம் போன்ற பல்வேறு இடங்களில் 2 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருந்தக கட்டடங்கள் கட்டப்பட்டு, திறக்கும் தருவாயில் உள்ளன.

**354 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவில்
திருத்தங்கல், சிவகாசி, ராஜபாளையம் ஆகிய
நகராட்சிப் பகுதிகளுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.**

குட்டி ஜப்பான் என அழைக்கப்படும் சிவகாசியில் பட்டாசு தொழிற்சாலைகளில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**இந்தியா முழுவதும் பட்டாசு விற்பனையை தடை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.**

**தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள் 1986ன் பிரிவு 3(பி)ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளிலிருந்து பட்டாசு தொழிலுக்கு விலக்கு பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசை மாண்புமிகு அம்மாவின் அரசு வலியுறுத்தி வருகிறது என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.**

பெருந்தலைவர் காமராசர் ஓர் ஏழைப் பங்காளர்,
ஆனால் நாட்டை ஆண்ட மன்னர்களுக்கெல்லாம் மன்னராக திகழ்ந்தவர். இதைக் கூறுகின்றபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

அரசர் ஒருவருக்கு நான்கு மகன்கள் இருந்தனர்.
தனக்குப் பிறகு வாரிசு உரிமையை யாரிடம் கொடுக்கலாம் என அரசர் யோசித்தார்.
அதற்கு ஒரு போட்டி வைத்தார்.

**‘உங்களில் யார் சிறந்த தர்மவானை
தேடிக்கண்டுபிடித்து அழைத்து வருகிறீர்களோ,
அவரே நாட்டை ஆள தகுதியுள்ளவர் ஆவார்**’ எனக் கூறினார். நான்கு மகன்களும் புறப்பட்டனர்.

முதல் மகன் பெரிய வணிகனை கொண்டு வந்து நிறுத்தி, “**இவர் தினமும் ஆயிரக்கணக்கான ரூபாய் தர்மம் செய்கிறார், கோயில், குளங்களை கட்டுகிறார்; அன்னதானம் செய்கிறார்**” என்றான்.

இரண்டாவது மகன், ‘ஒரு மெலிந்த அந்தணரை அழைத்து வந்து, ‘**இவர் முக்தி தரும் திருவிடங்களுக்கு பாதயாத்திரையாகவே செல்கிறார். தொடர்ந்து விரதம் இருக்கிறார். கோபமே படாதவர்**’ என்று கூறினார்.

மூன்றாவது மகன், எலும்பும் தோலுமாக இருந்த ஒரு சாதுவை அழைத்து வந்தான். பொதுமக்கள் நலமாக இருக்க வேண்டும் என்று “**தொடர்ந்து உண்ணா நோன்பு, தியானம் செய்து வருகிறார்**” என்றார்.

கடைசி மகன், ஒரு ஏழை குடியானவனை அழைத்து வந்து, “**தந்தையே, இவன் தெரு நாயின் காயத்துக்கு மருந்து போட்டு குணப்படுத்தினான்**’ என்றான்.

மன்னர் அந்தக் குடியானவனைப் பார்த்து,
“**நீ என்ன தர்மம் செய்கின்றாய் ?**” என்றார்.

“**நான் படிக்காதவன்,**
**தர்மத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.**
**யாராவது நோய்வாய்ப்பட்டால் முடிந்தவரை**
**பணிவிடை செய்வேன்.**
**யாராவது யாசித்தால் கைபிடி அளவாவது**
**அன்னம் கொடுப்பேன்**” என்றான்.

‘**இவன்தான் பெரிய தர்மவான்**’ என்று
அரசர் முடிவு செய்தார்.

‘**தர்மம் செய்வதற்கு கல்வி வேண்டாம்,**
**தவம் வேண்டாம், தியானம் வேண்டாம்.**
**நல்ல மனம் ஒன்றே போதும்.**’
அந்த வகையில் ஏழைக் குடியானவனை அழைத்து வந்த தன் இளைய மகனுக்கு முடிசூட்டினார் அரசர்.

இந்தக் கதையில் வரும் ஏழைக் குடியானவனைப் போன்றவர் பெருந்தலைவர் காமராஜர், என்பதால் அவரே சிறந்த முதல்வராக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார். இன்றும் அவரது புகழ் நிலைத்து நிற்கிறது.
எனவே, பெருந்தலைவர் அவர்களின் பிறந்த நாளில் நான் அவரை மனதார வணங்குகிறேன்.

கர்மவீரர் காமராஜர் அவர்கள் கிராமத்தில் வாழ்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அதிகமாக பள்ளிகளை கிராமந்தோறும் திறந்த காரணத்தினால்தான், கிராமத்திலே பிறந்தவர்கள் அறிவு ஜீவியாக, பல்வேறு பதவிக்கு உயர்ந்த நிலைக்கு வருவதற்குக் காரணம் அடித்தளமாக திகழ்ந்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். நானும் கிராமத்திலே பயின்றவன், அந்த சிறப்புக்கு உரியவர்களின் நானும் ஒருவன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, குறிப்பாக கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய, நடுத்தர மாணவர்கள் கிராமத்திலே படிப்பதன் மூலமாக கல்வி அறிவு பெறுவதற்கு அவர் உருவாக்கித் தந்த பள்ளிகளில்தான் இன்றைக்கு மேடையிலே வீற்றிருக்கின்ற அத்தனைபேரையும் உருவாக்கியது என்று சொன்னால், அதன் பெருமைக்குரியவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்தான். ஏனென்றால், அந்த சிந்தனை அவரிடத்திலே இருந்தது, அதை நனவாக்கியவரும் அவர்தான்.

அதுமட்டுமல்ல, என்னுடைய பகுதியைப் பொறுத்தவரைக்கும், கிட்டத்தட்ட 10 சதவிகிதம் நாடார் சமுதாயத்திலே இருக்கின்றார்கள். அதிலே 80 சதவிகிதம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கக்கூடியவர்கள். நான் முதலில் சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன், எனக்கு உறுதுணையாக இருந்த நண்பர், நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த திரு.ஏ.மாதேஸ் அவர்களை எடப்பாடி ஒன்றிய பெருந்தலைவர் ஆக்கினேன். அதற்குப் பிறகு, 2011–ல் நான் அமைச்சரான பிறகும், எடப்பாடி ஒன்றியத்திற்கு அவரை பெருந்தலைவராக்கி, அந்த சமுதாயத்தினருக்கு ஒரு மரியாதை செலுத்தினேன். ஆகவே, இந்த சமுதாய மக்களைப் பொறுத்தவரைக்கும், இந்தியாவிலேயே பரந்து, விரிந்து தொழில் செய்கின்ற சமுதாயம் இந்த நாடார் சமுதாயம் என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கின்றேன். எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கே ஒருவர் இருப்பார், அந்தளவிற்கு அறிவுப்பூர்வமான சிந்தனை உடையவர்கள் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதற்கு அடித்தளமாக விளங்கியவர் பெருந்தலைவர் காமராஜ் என்பதை நாம் நினைவுகொள்ள வேண்டும்.

இந்த சமுதாய மக்கள் வளரவேண்டும், அவர்களுடைய வாழ்க்கை மிளிர வேண்டும், வாழ்வு சிறக்க வேண்டும், அவர்களுடைய வாழ்வு உயர்வதற்கு நாங்கள் அத்தனை உதவிகளையும் செய்வோம் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஒரு முறை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, ஒருவரை ஒன்றியப் பெருந்தலைவர் என்று ஒருவரை குறிப்பிட்டதற்கு, உடனடியாக அம்மா அவர்கள் இடைமறித்து, பெருந்தலைவர் என்று சொல்லாதே, ஒன்றிய குழுத்தலைவர் என்று சொல், பெருந்தலைவர் என்று சொன்னால், கர்மவீரர் காமராஜர் ஒருவருக்குத்தான் அந்த பெயர் உண்டு என்று சொன்னார். அப்படி இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெருந்தலைவர் காமராஜரிடம் மிகுந்த மரியாதையை வைத்திருந்தார். ஏனென்றால் இந்த நாட்டிற்கு உழைத்தவர், தேசபக்தி கொண்டவர், எளிமையாக வாழ்ந்தவர், மக்களுக்காக வாழ்ந்து மறைந்த தலைவர்

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். இந்த மண்ணிலே எத்தனையோ பேர் பிறக்கின்றார்கள், வாழ்கின்றார்கள், இறக்கின்றார்கள், ஆனால், பிறந்த ஒருவர், தான் இறக்கின்றவரை இடைப்பட்ட காலத்திலே இந்த நாட்டு மக்களுக்கு என்ன செய்தார் என்பதைத்தான் மக்கள் சிந்திப்பார்கள். அந்த சாதனையை படைத்தவர் நம்முடைய கர்மவீரர் காமராஜர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே புகழஞ்சலி செலுத்தி, அவரைப் பாராட்டி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மண்ணிலே பிறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் படித்த பள்ளியிலே இந்த அரங்கினிலே பேசுகின்ற நல்வாய்ப்பினை உருவாக்கித் தந்த நாடார் மஹாஜன சங்கத்தின் நல்ல நிர்வாகிகளுக்கு மனமார, உளமார்ந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.
நன்றி! வணக்கம்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**